REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 282

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரைத் 28உ திங்கள் (10—5—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரைத் 29உ செவ்வாய் (11—5—54)

# விபரீதம் விளையுமுன் சமரசம் பேசுக!

—— (:) ——

## பூனை இளைத்தால் எலிகூட — திருமணத்துக்கு அழைக்குமாம்!

### வடவர் திராவிடரைக் கேலி செய்வதன் காரணம் அறிவோம்

### டில்லி 'புத்திசாலி'களின் போக்கையும் அறிவோம்

## கருணாநிதி எச்சரிக்கிறார்

"நம்மை இழித்துப் பழித்து ஏசிப் பேசித் திரியும் வட நாட்டவர்களிடமிருந்து நாம் விடுதலை பெற போர் முழக்கம் செய்து வருகிறோம். நமது விடுதலைப் போரில், 'நகரங்களை நாமே பிடித்துவிட்டோம், பிடித்துவிட்டோம்,' என்ற செய்தியைக் காட்டிலும், 'நேருவே கொடுத்துவிட்டார்—சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டார்' என்ற செய்திதான் அவருக்கும் நமக்கும் நல்லதாக இருக்க முடியும்."

—இவ்வாறு, சேலம் அரசியல் மாநாட்டில் 'அரசியல் எழுச்சி' என்ற தலைப்பில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"நம்முடைய வளங்களை, நாம் பயன்படுத்திக்கொள்ள இயலாது, வடவரால் கொள்ளையிட்டுச் செல்லப்படுவதை எதிர்த்துத்தான் நாம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்கிறோம்! நமது தாயகம் விடுதலை பெற வேண்டுமென்கிறோம்!

200 ஆண்டுகளுக்கு முன்னர், அடிமையாயிருந்த அயர்லாந்து, மொழி அடிப்படையைக் காரணமாகக் காட்டி சுதந்திரப் போர் நடத்தியது. நாமும் விடுதலை கோருவதற்கு, மொழி அடிப்படையையும் கொண்டிருக்கிறோம். அவர்களது மொழியான 'கேல்' மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் அதிகமான வேறுபாடுகள் இல்லாமலிருந்தாலும், தங்களின் பண்பும், கலையும், நாகரீகமும் 'கேல்' மொழியிலேயே புதைந்திருப்பதைக் கண்ட அவர்கள், தங்களை விடுவித்துக் கொள்ள போர் முழக்கம் செய்தனர்.

நாம்தான் இந்த நாட்டிலே நமது தாய்மொழியான தமிழ் அணு அணுவாய் சாவை மேற்கொள்ளச் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தோம்; காப்பாற்ற வேண்டும் தமிழை என எண்ணினோம்; மக்களுக்கு தாய்மொழி ஆர்வத்தை ஊட்டினோம்.

நாமும் நமது மொழி அடிப்படையில் நம்மை நாமே ஆளவேண்டும்; பிற மொழி எங்கள் மொழிமீது ஆதிக்கம் செலுத்த விடோம் என்று சொல்லி, விடுதலைக் குரல் எழுப்பும்போதுதான் நேரு நம்மை எல்லாம் பைத்தியக்காரர்கள் என சொல்லியிருக்கிறார். வேறெப்படித்தான் பேசினாலும், பைத்தியக்காரர்கள் என்று மட்டும் எதிரிகளைச் சொல்லக்கூடாது; பைத்தியக்காரர்கள் என்று எதிரிகளை வசை பாடுவது ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும்.

நம்மைப் பைத்தியக்காரர்கள் என்று வசை பாடும் நேரு கும்பமேளாவுக்குத் தலைமை தாங்கினார்; அது அவருக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றவில்லை; தன் சகோதரியின் மக்களை, கோத்தலாவலையுடன் நடனமாடவிட்டாரே, அது அவருக்கு புத்திசாலித்தனமாகத் தெரிகிறது!

பூனை இளைத்தால், எலிகூட திருமணத்திற்குக் கூப்பிடுமாம்! அதுபோன்று புலிகளான நம்மை, எலிகளான வடவர் ஏளனம் செய்கின்றனர்.

பைத்தியக்காரர் என்று சொல்லுகிறாரே பண்டிதர், அவர் நிர்வகிக்கும் வெளிநாட்டிலாகாவுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் செலவாகிறது. இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதுவருக்கு மாளிகை ஒன்று கட்ட திட்டமிட்டனராம், இந்த ஏழைப் பங்காளர்கள்! அந்த மாளிகையை எழுப்ப, 1000 பவுன் மூலதனமுள்ள ஒரு கம்பெனியிடம், 17 ஆயிரம் பவுன்களைத் தந்தனராம், இந்த புத்திசாலிகள்! இவர்கள் 17 ஆயிரம் பவுனையும் அந்தக் கம்பெனியாரிடம் தரும்போது அந்தக் கம்பெனியார், வைத்திருந்த மீதி பாங்கியில் 2 பவுன்தான்! 17 ஆயிரம் பவுனையும் பெற்றுக் கொண்டு, எங்கேயோ ஓடிவிட்டனர், அந்தக் கம்பெனி முதலாளி, டைரக்டர் எல்லாம்! பின்னர், இவர்கள் வழக்குத் தொடர்ந்தபோது அவனிடமிருந்து 1000 பவுன்களை மட்டும் திரும்பப் பெற்றிருக்கின்றனர். பாக்கியான 15,995 பவுன்கள் நஷ்டப்பட்டது, இந்திய அரசாங்கம்! இந்தச் செய்கை பைத்தியக்காரத்தனமானதாகத் தெரியவில்லை பண்டிதருக்கு!

இங்கிருந்து 858 கோடி ரூபாய் ஆண்டுதோறும் வெளிநாட்டிற்குச் செல்கிறது. வெளிநாட்டிலிருந்து நமக்கு வருவது 752 கோடி ரூபாய்தான்! இதிலே ஆண்டுதோறும் நமது நாட்டுச் செல்வம் 100 கோடி ரூபாய் வெளிநாடு போவது பற்றி இவர்களுக்கு கவலை இல்லை! அது அவர்களுக்கும் பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை!"

## காங்கிரஸ், முதலாளித்துவ முகாமாகிவிட்டது

—— (:) ——

### அடக்குமுறை அவிழ்த்து விடுகிறது! நாட்டை நசியச் செய்கிறது!

—— (:) ——

### இந்து மகாசபைத் தலைவர் இடித்துக் காட்டுகிறார்

ஐதராபாத், மே 8—

"இந்திய தேசியக் காங்கிரஸ், முக்கிய பிரச்னைகளில் இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டது. காங்கிரஸ் அரசாட்சியானது இந்த ஏழாண்டு காலத்தில் குறிப்பிடத்தகுந்த எந்த நற்காரியத்தையும் செய்யவில்லை; ஆனால், அது ஏழை மக்களுக்கு துயரத்தையும், அழிவையும் தேடித் தந்து நாட்டின் மிக நெருக்கடியான பிரச்சினைகளைத் தீர்க்காமலே விட்டுவிட்டது."

"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைய காங்கிரஸ் கட்சியானது முதலாளித்துவத்தினால் நடத்தப்படும் ஒரு இயக்கமாகும். பெரும் பண முதலைகள், கள்ள மார்க்கெட்காரர்கள், நிலப் பிரபுக்கள், மகாராஜாக்கள், குறுநில மன்னர்கள் இவர்களால்தான் இன்று காங்கிரஸ் வளர்க்கப்படுகிறது."

—இவ்வாறு, அகில இந்திய இந்து மகாசபைத் தலைவர் தோழர் என். சி. சாட்டர்ஜி, இங்கு நடைபெற்ற 31-வது அகில இந்திய இந்து மகாசபை மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இந்திய அரசாங்கத்தின் நடுநிலைமைக் கொள்கை மற்ற நாடுகள் இந்தியாவுடன் கூட்டாகச் சேர்ந்து நிற்கும் வாய்ப்பினைத் தடுத்து இந்திய நாட்டைத் தனித்து நிற்குமாறு செய்துவிட்டது. இந்திய நாட்டினைப்பற்றி செய்யப்பட்ட விளம்பரங்களால் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. உலக விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டு இந்தியாவைப்பற்றித் தவறாக மற்றவர்கள் எண்ணுமாறு செய்ததின் பயன், இன்று நாம் அபாயகரமான நிலையில் உள்ளோம்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துவிட்ட காங்கிரஸ் ஆட்சியின் ஆதிக்கமனப்பான்மையையும், பாதுகாப்புச் சட்டங்கள் என்ற பெயரில் நாட்டில் தாண்டவமாடும் அடக்குமுறைகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அமெரிக்கா—பாகிஸ்தான் ஒப்பந்தம் நல்ல நோக்குடன் செய்யப்பட்டதல்ல. பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் படைகள் காஷ்மீரின் மீது இந்தியாவிற்கு எதிராய் ஏவப்படமாட்டாது என்று உறுதியாய் கூறமுடியாது. இந்திய நாட்டின் நலனுக்கு எதிரான கொள்கை உடைய நாடு ஒன்றுக்கு படை பல உதவி அளிப்பதன் மூலம் உலகில் குடியரசின் வளர்ச்சிக்கு அமெரிக்கா ஊக்கம் விளைவிக்கின்றது என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்து மகா சபையினராகிய நாம், இந்திய நாடு, நேர்மையான முறையில் மேற்கத்திய குடியரசுகளுக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை என்று வருத்தப்படுகிறோம்.

## விக்டோரியா அரசிகாலத்தில் கைத்தறியாளர் நிலை

### விசாரணைக் குழுவிடம் அரசியார் கூறிய தகவல்

புது டில்லி, மே 8—

"பரிதாபத்திற்குரிய சூழ்நிலையில் கைத்தறியாளர்கள் இருந்து வருகின்றனர். வேலை கிடைக்கும் பட்சத்தில் வாரத்திற்கு 75 மணி நேரம் உழைக்கிறார்கள். சிறு குடிசைகளில் வசித்துக்கொண்டு, குடும்ப வருவாயாக வாரமொன்றுக்கு ஏழு ஷில்லிங் பெற்றுக்கொண்டு, பட்டினி கிடந்து வருகிறார்கள்."

—இவ்வாறு, விக்டோரியா அரசியார், தாம் பட்டத்திற்கு வந்த முதல் ஆண்டில், கைத்தறியாளர் நிலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவிடம், வாக்குமூலம் தந்தனர்.

நித்தியானந்த கனுங்கோவைத் தலைவராகக் கொண்டு இயங்கி வரும் கைத்தறி விசாரணைக் குழுவின் உறுப்பாக உள்ள புள்ளிவிவர ஆய்வுக் குழு, மேற்குறித்த தகவலை கொடுத்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கை 232 லட்சம்தான் எனவும், 50 லட்சம் கைத்தறிகளுக்குக் கூடுதலாக உள்ளது எனக்கூறப்படுவது வெறும் மிகைப்படக் கூறப்பட்ட கூற்று எனவும், அந்தக் குழு அறிவிக்கிறது.

## ஆசிரியர்கள் அரசியலில் பங்கேற்பதைத் தடுக்க சர்க்கார் முயற்சி

டோகியோ, மே. 8—

ஆசிரியர்கள் அரசியலில் பங்கு கொள்வதைத் தடுப்பதற்காக இரு மசோதாக்களை ஜப்பான் அரசாங்கம் கொண்டுவந்து இருக்கிறது. இதை எதிர்க்கும் வகையில், 12 ஆசிரியர் தலைவர்கள், பார்லிமெண்டு முன்பாக நேற்று முதல் மூன்று நாள் உண்ணாவிரதம் ஏற்பாட்டை மேற்கொண்டு உள்ளனர்.

இரண்டு நாளைக்கு உண்ணாநோன்பை மேற்கொள்ளுமாறு ஜப்பான் முழுதும் பரவிக் கிடக்கும் சங்கத்தைச் சேர்ந்த 5 லட்சம் ஆசிரியர்களை சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

நம் நாடு

சென்னை 10-5-54 திங்கள்

# அர்த்தமற்ற குழைவு

உருவச் சிலை திறக்கப்பட்டது! படத் திறப்பு விழாவும் நடைபெற்றது! மணிக் கூண்டும் திறந்து வைக்கப்பட்டது! செங்கற்பட்டு நகரில், விழா!! ஒருவர் இருவரல்ல, மூன்று அமைச்சர்கள, முதலமைச்சர் உட்பட, முகாமிட்டனர், வைபவம், விருந்து, சொல்மாரி ஆமோகம்.

தொடர்ந்து இருபத்தைந் தாண்டுக்காலம் செங்கற்பட்டு நகராட்சி மன்றத் தலைவராகவும், கூட்டுறவு இயக்கத்திலே பதவியாளராகவும் இருந்து வருபவரும், நெரும்பூர், விட்டலாவரம் ஜெமீன்களைக் கொண்டிருந்தவரும், பெரும் பணிகருமான, வேதாசல (முதலியார்)னாரின், சேவை களைப் பாராட்ட, தமிழ் நாடு காங்கிரசைக் கட்டிக் காத்தவரும், இன்றைய முதலமைச்சருமான காமராசரும், காங்கிரசைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் தலைகாட்டாது அடித்து விரட்டிய 'மாவீரரும்,' உழைப்பாளி கட்சியின் தலைவராக இருந்தவரும், இது போது காங்கிரசைத் தழுவிக் 'கனம்' ஆனவருமான கடலூர் ராமசாமியாரும், காமராசரிடம் தோற்று, பிறகு அவருடனேயே இணைந்து 'கனம்' ஆன சுப்ரமணியனாரும் கூடி, விழாக் கொண்டாடினர்.

இந்த விசித்திரமான நிகழ்ச்சி கண்டு, பொதுமக்கள் என்ன எண்ணினார்களோ அறியோம்!!

செங்கற்பட்டுச் சீமான் நகராட்சி மன்ற மூலம் நற்பணி புரிந்தவர் என்பதையும், கூட்டுறவு இயக்கத்தை வளமாக்கியவர் என்பதையும் இந்த மூவர் அறியும் வாய்ப்பு எப்போது எவ்வண்ணம் ஏற்பட்டதோ நாமறியோம்—நாட்டவரும் ஆச்சரியமே கொள்வர்.

ராவ்சாகிபு ஆகி, சர், ராமசாமியின் உறவினராகி, வேதாசலனார், தமது மாவட்டத்திலே பணியாற்றி வந்த காலே, காங்கிரசுக்கும் அவருக்கும் கடுகளவு தொடர்பும் கிடையாது. விழாவன்று அவரே அதை விளக்கமாக்கிடும் போது, உண்மைக்கு அருகே வந்துமிருக்கிறார்! 'நான் இவ்வளவு நீண்ட காலமாக, தொடர்ந்து நகராட்சி மன்றத் தலைவராக இருந்ததன் காரணம், நான் எந்தக் கட்சியிலும் சேராததுதான்!'—என்று அவர் கூறியிருக்கிறார். காங்கிரசில் அவர் ஈடுபடவில்லை, பிற கட்சிகளிலும் அவர் பணியாற்றவில்லை என்ற அளவில், அவர் கூறியது உண்மை. ஆனால் அவரை அறிந்தவர்கள் அறிவர், அவர் எந்தக் கட்சியிடம் பற்று வைத்திருந்தார் என்பதை.

ஒரு காலத்தில், பெரியாரின் பெரும் படையிலேயும் அவர் இருந்திருக்கிறார்—பணி புரிந்தார் என்று கூறமாட்டோம். இருந்திருக்கிறார்! செங்கற்பட்டு மாகாண சுயமரியாதை மாநாட்டிலே அவருடைய 'தொடர்பு' சாதாரணமானதல்ல. கடந்த பொதுத்தேர்தலின் போதும், காஞ்சிபுரம் தொகுதியில் சர். ராமசாமியாரின் திருமகனார் டாக்டர் கிருஷ்ணசாமிக்காகப் பாடுபட்டார்—தொகுதி மக்கள் அறிவர். எனவே எக்கட்சியிலும் சேராதவர் என்று கூறிக்கொண்டது முற்றிலும் உண்மையல்ல. எக்கட்சிக்கும் பயன்பட முடியாதவர்களின் பட்டியலில் உள்ளவர் என்று கூறினால், முழுக்க முழுக்க உண்மையாக இருக்கும்.

தம்முடனோ, தமது கொள்கை கோட்பாடுகளுடனோ தொடர்பு அற்றவரின் பாராட்டு விழாவிலே, காங்கிரஸ் அமைச்சர்கள் ஏன் கலந்து கொண்டனர் என்று கேட்கவில்லை-அரசியல் நாகரிகம் வளர இவ்விதமான போக்குத் தேவை—மறுக்கவில்லை. ஆனால், இத்தகைய சம்பவத்தின் போதுதான், பட்டவர்த்தனமாகப் பேச வேண்டும் ஒளிவும் மறைவும், அர்த்தமற்ற குழைவும், பொருளற்ற உபசரிப்பும், பொதுவாழ்வு பண்பினை வளர்த்திடாது.

இவர் காங்கிரஸ்காரரல்ல; எனினும் கண்ணியமான சேவை செய்திருக்கிறார்; எனவே, பாராட்டுகிறோம் என்று கனம்களும், நான் இவர்கள் கட்சியல்ல, எனினும் இவர்கள், என்னுடைய தொண்டு செய்ததைப் பாராட்டுவதற்காக மகிழ்ச்சி, என்று வேதாசலனாரும் பேசினால், பொது மக்கள், கட்சிகள் வேறு வேறு ஆயினும், தமக்குச் சரி என்றுபட்ட கடமையைப் புரிபவரை, எவரும் போற்றத்தான் செய்வர், என்ற பாடமாவது காண்பர். அதை விட்டு, பெரிய இடத்து உபசாரம் என்ற போக்கிலே வைபவம் நடைபெற்றால், பொது மக்கள் என்ன எண்ணுவார்கள்?

காங்கிரசோ, இல்லையோ, தனவான், தனவான் என்றால், இந்த மந்திரிமார்கள், விழுந்தடித்துக்கொண்டு ஓடிவருகிறார்கள்! என்று கூறிக் கேலிதான் செய்வர்.

காங்கிரஸ் இன்று, முன்பின் தொடர்பு, பொது மக்கள் தொடர்பு, பொதுப்பணி, பொதுப் பண்பு முதலிய எதையும் பற்றிக் கவலைப்படாமல், பணம் படைத்தவர்களிடம் பல்லிளிக்கிறது என்பதை இதுபோலப் பல சம்பவங்கள் விளக்கிவிட்டன. இதை நன்முக அறிந்துதான் போலும், வேதாசலனாரும், இப்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். மக்கள் என்றால், அகராதிப்படி பொருள்கொள்ளல் கூடாது, இத்தகைய அரசியல் சம்பவத்தின்படி பொருள் கொள்ள வேண்டும், மக்கள் என்றால், சீமான்கள் என்று பொருள்!

# நாம் விரும்பும் துறவிகள்!

[ சி. என். அண்ணுதுரை ]

அழகான மோட்டார்கார், வரிசை வரிசையாக வந்தன! சீமான்களும் சிங்காரிகளும், வந்தனர்! அனைவர் கண்களிலும், நீர் கசிந்தது! என்ன பக்தி! என்ன தியாகம்! என்று தழதழத்த குரலில் பேசினர்—கூப்பிய கரத்தினராயினர்! ஏன்? இல்லறத்தை விடுத்து ஒருவர் துறவியாகும் ஓர் தூய விழாவைக் கண்டனர்; நெஞ்சு நெகிழ்ந்தது; அருள் வேண்டி, 'சன்யாசம், மேற்கொள்ளும்' சத்புருஷரைத் தரிசித்து 'ஜென்ம சாபல்யம்' அடையக் கூடினர்.

நாசிக் நகரத்தில் மே 7-ம் நாள், சேத் மோதிலால் ஹிராசந்த் என்பவர், சன்யாச ஆஸ்ரமத்தை மேற்கொண்டார். அந்த வைபவத்தைக் கண்டு, அகத்தூய்மை பெற்று மகிழப் பிரமுகர்கள் பலர், மாதர் பலப்பலர் கூடினர்.

பணத்தைத் தீண்டேன்! பாதசாரியாகவே செல்வேன்! பிச்சை எடுத்து உண்பேன்! பந்தம் பாசம் அறுத்துக் கொண்டேன்!—என்று 'சங்கல்பம்' எடுத்துக்கொண்டார் சேத் மோதிலால்.

சாது, சன்யாசிகள் இங்கு அத்திபூத்தது போலவா—இல்லையே—ஏராளமாக அல்லவா உள்ளனர்—அங்ஙனமிருக்க, யாரோ ஒரு சேத் மோதிலால், 'சன்யாசம்' மேற்கொள்வதுபற்றி ஏன் இவ்வளவு 'முக்கியத்துவம்' காட்டப்படுகிறது என்று கேட்கத் தோன்றும், எவருக்கும். காரணம் இருக்கிறது, தக்க காரணம்—எல்லாம் பணம்தான் தான் காரணம்!

சேத் மோதிலால், ஒரு பிரபல இலட்சாதிகாரி!

இலட்சாதிகாரி பிட்சா கோலமேற்பதால்தான், காணும் காட்சியாகி, கைகூப்பித் தொழும் காட்சியாகி இருக்கிறது. பஞ்சத்து ஆண்டியும், பரம்பரை ஆண்டியும் பல இலட்சம் உள்ளனர்—கவனிப்பார் யார்? இல்லறத்தில் இருந்துகொண்டே, அழுக்கால் உடை காவியாகி, வறுமையால் உணவு ஒருவேளைக்கும் கிட்டாது, திண்டாடித் தவிக்கும் ஏழைகள் ஏராளமாக உள்ளனர். வியப்போ, திகைப்போ கொள்வதில்லை, இத்தகையோரைக் கண்டால்! ஏளனம் கூடச் செய்வர், தைரியமாக ஏசவும் செய்வர்; ஆனால், சேத் மோதிலால் இலட்சாதிகாரி; எனவே, அவருடைய 'துறவு' கண்டறியாக் காட்சியாகி, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவும், பவப்பிணி போக்கும் மருந்தாகவும் அமைந்தது! அவ்வித எண்ணம் கொண்டே, 'துறவு' மேற்கொள்ளும் விழாவைக் காண, திரளான கூட்டம் வந்தது.

சேத் மோதிலால், தம்மிடம் திரண்டிருக்கும் பல இலட்சம் ரூபாய்களை, ஏழை எளியவருக்கு வாரி வழங்கிவிட்டார், பிறகே, 'துறவு' மேற்கொண்டார் என்று எண்ணிக் களிப்படைந்துவிடாதீர்கள். அவருக்கு ஆறு மக்கள் உள்ளனர்!!

ஆண்டு 58 ஆகிறது; ஆறு மக்கள் இருக்கிறார்கள்! வாழ்விலே மிக முக்கியமான பகுதியை, பாசம் பற்று, சுவை, பயன் ஆகியவற்றைக் கொண்டு, உண்டு, விண்டு, வாழத்தக்க பகுதியைச் சேட் முடித்துக்கொண்டு, அறுபதை அணுகும் போது, 'துறவு' மேற்கொண்டிருக்கிறார்! துடிக்கும் இளமையில், துடியிடைக்கும், கொவ்வை அதரத்திற்கும், தேன் மொழிக்கும், தேக காந்திக்கும், மதுக்குடமன்ன விழிகளுக்கும், இதயத்தைத் தாக்கவல்ல இடை அசைவுக்கும், இன்பபுரிக்கு வா, வா என்றழைக்கும் புன்னகைக்கும், பலியாக மறுத்துவிட்டவர் அல்ல; வயது 58!! எனினும், சேத் மோதிலாலின் துறவுக்கோலம் காண நாசிக் நகரிலுள்ள ஜெயினமார்க்க முதியவர்கள் எல்லாம் கூடினர்.

இந்திரியங்கள், அடக்க ஒடுக்கத்தை இயல்பாகவே பெற்றுவிடும் 'பருவம்' ஒன்று உண்டு; அறுபதாண்டுகளை நெருங்கும்போது, அந்தக் கட்டம் வந்துவிடுகிறது. இல்லறத்திலேயே இருப்பினும்கூட, பேரனே, பேத்தியோ காதற்கனிமொழி பேசுவதைக் கீதமாகக் கொண்டு மகிழ்வதும் வாழ்வின் சுவைகளைக் குடும்பத்தில மற்றவர்கள் பெறக்கண்டு பூரிப்பதும், சாதாரண மனிதருக்கு, சிரமமின்றி ஏற்பட்டுவிடுகிறது. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு மட்டுமே, ஆசை நரைப்பதில்லை; பாசம் பட்டுப்போவதில்லை. அந்த ரகத்தவராகிவிடாமல், சேத் மோதிலால் இந்த 58-ம் ஆண்டிலே, 'சந்யாசம்' மேற்கொண்டாரே என்ற அளவிலே மகிழலாம். ஜெயின மார்க்கம், இது குறித்துத் தீட்டிடும் வழி வகைகள் எப்படி இருப்பினும், பொதுவாக 'துறவறம்' மேற்கொள்வது, ஆசைகளை குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு அகற்றிக்கொள்வது என்ற ஏற்பாடு, எற்றுக்கு, என்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

கனியேனும் செங்காயேனும் உதிர்சருகேனும் கந்தமூலங்களேனும்—போதும் என்றும், இடைமுடன் என் பசிக்கு இன்னபடி என்று உணவு கொண்டுவந்தால் உண்பேன், இல்லையெனில் ஏகேன் என்றும், பசித்தால் புசித்து வியர்த்தால் குளித்து, நிழல்கண்டால் படுத்து, புலன்களை ஒடுக்குதல் என்றும், செம்பொன்னுக்கும் ஓடுக்கும் வித்தியாசம் காணமாட்டாத உள்ளப் பாங்கு பெறுதல் என்றும், 'துறவு' பற்றி இலக்கணம் உரைக்கப்பட்டிருக்கிறது. துறவிகளாகி, அந்தந்த மதக்காரர்களிடம் ஆராதனம் நடாத்தும் 'பேறு' பெற்றுவிடுபவர்களோ, இந்த இலக்கணத்தை ஏடு மூலம் நாட்டவருக்குத் தருவதன்றி, வாழ்க்கையில் பெரும்பாலும் கடைப்பிடிப்பதாகக் காணோம்!!

அதற்கென்று அமைந்துள்ள இலக்கணத்தில் வழுவாது உள்ள தூய்மையாளர்களாயினும்கூட, அவர்கள் மேற்கொண்டுள்ள நிலை, தத்தமது ஆத்ம உயர்வுக்கா, அல்லது மக்களின் நலனுக்கா என்று ஆராயும்போது, குறிப்பாகவும் சிறப்பாகவும், தமக்கு 'நற்கதி' கிடைக்க வேண்டுமென்பதே குறிக்கோளாக இருந்திடக் காண்கிறோம்.

ஊசி முனைமீது நின்று தவம் செய்பவர், இரும்பை

(3-ம் பக்கம் பார்க்க)

# இப்படி நடைபெற்றிருந்தால் குண்டுமணி அளவு நன்மையாவது கிடைத்திருக்கும்

தோழர்கள் மாணிக்கவேலரும் ராமசாமியும் 'கனம்'கள் ஆகிவிட்டதால், பொதுவாக பிற்படுத்தப்பட்ட வகுப்பாரும், குறிப்பாக வன்னிய சமூகத்தாரும், முன்னேற்றம் காண வழி ஏற்படுமா என்று சிலர் கேட்கிறார்கள்—தூய்மையான எண்ணத்தால்!

கனம்களும், தங்களுக்கு அமைச்சர் பதவி கிட்டிவிட்டதால், சமூகமே உயர்ந்துவிடும் என்று சாகசமாகப் பேசுகிறார்கள்.

இருவருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காக என்று தனியாக இலாகா தரப்படவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும்.

அரிஜன முன்னேற்றத்தைக் கவனிக்க ஒரு இலாகா போல, இந்தப் பிரச்னைக்கு இல்லை.

ஒருவர் ரெவின்யூ! மற்றவர் முனிசிபாலிடி, ஜில்லா போர்டு!!

இருவருக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன், உரிமை, முன்னேற்றம் ஆகியவைகளை கவனிக்கும் அதிகாரமும், பொறுப்பும், வசதியும் நிதியும், வாய்ப்பும் அமைந்த இலாகா தரப்பட்டிருந்தாலாவது, அவர்கள் மந்திரிகளானதால், குண்டுமணி அளவு நன்மையாவது வன்னிய மக்களுக்குக் கிடைக்கக் கூடும் என்று கூறலாம். இப்போது அதுவும் இல்லை.

இல்லாதது மட்டுமல்ல; வன்னிய மக்கள் தங்கள் உரிமைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் கிளர்ச்சியும் செய்ய இடமிருக்காது; ஏனெனில், ஆட்சியாளர்கள இரு கனம்களையும் காட்டிக், கூறிவிடுவார்கள்—'உங்கள சமூகத்திலே இருவர் மந்திரியானார்களே, போதாதா; சும்மா தொப்பதிங்கள்,—என்று கூறிக் கேலி செய்து அனுப்பிவிடுவார்கள்.

## மந்திரிகளுக்கு சீட்டு கிழிந்தது

### சிந்து கவர்னர் கண்டிப்பு

சிந்து மாகாண மந்திரி சபையில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, கவர்னர் ரஹிமுத்துல்லா, கண்டிப்பான உத்திரவு பிறப்பித்துவிட்டார்

ரெவின்யூ மந்திரி ரஷீதி நிதி மந்திரி முகமத் அக்பர், உணவு மந்திரி கேசார் ஆகிய மூவரும் உடனே ராஜினாமா செய்துவிட வேண்டுமென்றார், இல்லையென்றால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிப்பு வெளிவரும் என்றும் கவர்னர் உத்திரவு பிறப்பித்துவிட்டார்.

# ஆச்சாரியாரை நேரு கைவிட்ட காரணம்

## நேருபோக்கைக் கண்டித்து! சாடி கூறினராம்

### வெளி நாட்டு தலைவர்களிடம் குசுகுசு!

சட்டசபை எதிர்த்தாலும், காங்கிரஸ் கட்சியே எதிர்த்தாலும் நேரு நம்மை எப்போதும் கைவிட மாட்டார், எப்படியும் தன்னையே முதலமைச்சராக இருக்கும்படி சிபாரிசு செய்வார் என்ற நம்பிக்கை ஆச்சாரியாருக்கு அளவுகடந்து இருந்து வந்தது.

இந்த நம்பிக்கையை வளர்த்துவிடக்கூடிய முறையிலே, நேரு பண்டிதர் சென்னையில் பேசும்போது ஆச்சாரியாரை வானளாவப் புகழ்ந்தார்.

'என்னைக்காட்டிலும் திறமைசாலி, அறிவு வசாலி, இந்தியாவுக்கே ஒரு அரும் பொக்கிஷம்' என்றெல்லாம் பண்டிதர் புகழ்ந்தது கேட்டுப் பூரித்துப்போன ஆச்சாரியார், தம்மை யாராலும் அசைக்க முடியாது என்று நம்பினர்.

ஆனல், நெருக்கடி முற்றிய நேரத்தில், ஆச்சாரியாரை

## சென்னையில் டிராம்!

★

சென்னையில் டிராம் சர்வீஸ் நடத்த சில தனிப்பட்ட முதலாளிமார்கள் முயற்சிப்பதாகவும், சர்க்கார் எத்தகைய சலுகை தர இயலும் என்று கண்டறிய பேச்சு வார்த்தை நடைபெறுவதாகவும் தெரிகிறது.

இரண்டு மார்வாரி, இலட்சாதிபதிகளின் பெயர் இது சம்பந்தமாக அடிபடுகிறது.

கோடைக்கானல் பகுதி பஸ் முதலாளி ஜெயராஜ் நடார் பெயரும், மதுரை டி வி எஸ். கம்பெனியாரின் பெயரும் இது சம்பந்தமாகப் பேசப்பட்டு வருகிறது'

நேரு கைவிட்டார்! காரணம் என்ன?

வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்திக்கும்போதெல்லாம், ஆச்சாரியார் நேருவின் கொள்கைகளையும், போக்கையும், திட்டத்தையும் கண்டித்துப் பேசிவந்தாராம்!

நேரு கையாண்டுவரும் 'நடுநிலைமை'க் கொள்கை சரியல்ல; அமெரிக்க முகாமில் இந்தியா சேர்ந்துவிட வேண்டும் என்பது ஆச்சாரியார் கருத்து- இதனைத்தான் வெளிநாட்டுத் தலைவர்களிடம் பேசும் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் ஆச்சாரியார், நேருவின் மதிப்பு குறையக் கூடிய வகையில் கூறிவந்தாராம்!

இந்தச் சேதி பண்டிதருக்குத் தெரிந்துவிட்டதாம். அதனல் ஆத்திரம் கொண்ட நேரு, ஆச்சாரியாரைப் பீடத்திலிருந்து கீழே உருட்டிவிடும் முயற்சி நடைபெற்ற போது ஆச்சாரியாரைக் கைவிட்டுவிட்டாராம்!

## ஏனே மந்திராலோசனை?

★

ஆச்சாரியாரின் வாரிசு என்று அறிமுகப்படுத்தப்பட்டு, காமராசரால் தோற்கடிக்கப்பட்டு, மீண்டும் காமராசர் மந்திரி சபையில் நிதி அமைச்சராக உள்ள சுனம் சுப்ரமணியம், இப்போதும் அடிக்கடி ஆச்சாரியாரிடம் கூடிக் கூடிப் பேசி வருகிறாராம்! என்ன மந்திராலோசனையோ! ஏனே இந்த மந்திராலோசனை?

## புதிய கல்வித் திட்டம்

### நிச்சயம் ஒழியும்!

புதிய கல்வித் திட்டம் ஒழிக்கப்படுவது நிச்சயம் என்றாகி விட்டது. இதுபற்றி எழுவர் கொண்ட கமிட்டி கூடிப் பேசியாகி விட்டது விரைவில் இதன் முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தக் கமிட்டியில் புதிய கல்வித் திட்டத்துக்கு நிதி அமைச்சர் சுனம் சுப்ரமணியம் வக்கீல் வேலை செய்கிறார், என்றாலும், திட்டம் ஒழிக்கப்படுவது உறுதியாகி விட்டது.

நாட்டு மக்கள், காமராசர் தர இருக்கும் நல்ல சேதியை ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறார்கள்.

இந்தோ – சீனாவில் சுமார் 2,500 இந்தியர்கள் இருக்கிறார்களென்றும், அவர்களுடைய மொத்த சொத்து சுமார் 50 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறதென்றும் மக்கள் சபையில் நேரு தெரிவித்தார்.

## வடக்கத்திக் கொள்ளைக்காரிகள்

### பத்து பேர் பிடிபட்டனர்

ஆமதாபாத் நகரைச் சேர்ந்த பத்து வடநாட்டுக் கொள்ளைக்காரிகளை, எழும்பூர் வட்ட சப் இன்ஸ்பெக்டர் ரசாகான் வெள்ளிக் கிழமை கைது செய்திருக்கிறார்.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டியில், இந்தப் பெண்கள் எழும்பூர் வந்து இறங்கியபோது கைது செய்யப்பட்டனர்.

வியாழக்கிழமை இரவு இந்தப் பெண்கள், கூவோஞ்சேரியில் ஒரு சவுக்கார் வீட்டிலே பத்தாயிரம் ரூபாய் பெறுமான முள்ள பொருளைக் கொள்ளையடித்தனராம்.

தகவல் தெரிந்து போலீஸ் அவர்களைக் கைது செய்தபோது ரொக்கமும் சாமான்களும் கைப்பற்றப்பட்டன. சுமார் அறுநூறு ரூபாய் பெறுமானமுள்ள சொத்து கிடைத்திருக்கிறது.

இவர்கள் கொள்ளைக்கார ஆண்களுடன் சேர்ந்தே இந்தக் கொள்ளையை நடத்தியிருக்கிறார்களென்று கூறப்படுகிறது. ஆண்கள் இன்னமும் சிக்கவில்லை

## நமக்கு அது தெரியாது!

— (:) —

### நடைபெற்ற சம்பவம் ஒன்று மட்டும் தெரியும்!

கடலூர் 'சுனம்' ராமசாமி அவர்களின் போக்கை, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் நேசத் தொடர்பு கொண்ட அவருடைய தம்பி தோழர் சேகர் ஆதரிக்கிறாரா என்று பலர் நேரிலும், கடித மூலமும் கேட்கிறார்கள். நமக்கு அது தெரியாது. ஆனல், கொள்கைப் பற்று உள்ளவர்கள் இவ்விதமான சமயத்தில், 'இரத்த பாசத்தை'க்கூட, இரண்டாந்தரமாகக் கொள்வார்கள் என்பது தெரியும்.

முன்பு சென்னை அரசியலில் நடைபெற்ற ஒரு சம்பவம் மட்டும் கவனத்திற்கு வருகிறது.

தோழர் ராமநாதன் ஆச்சாரியாரால், 'சுனம்' ஆக்கப்பட்டார். அவரை விளம்பர மந்திரியாகப் போட்டு விட்டால், சுயமரியாதைக்காரர்களை எல்லாம் வளைத்து இழுத்து, தரைக்குள்ளாய் மாட்டிவிடலாம் என்று ஆச்சாரியார் ஒரு தப்புக்கணக்கு போட்டார். அது நடைபெறவில்லை.

தோழர் ராமநாதனின் தம்பி தோழர் சம்பந்தம், அப்போது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 'சர்வாதிகாரி'யானர்—சிறைப்பட்டார். நாடே அவருடைய கொள்கைப் பற்றைப் பாராட்டிற்று; காங்கிரஸ் முகாமிலே கூட, அவருடைய 'மதிப்பு' உயர்ந்தது. அண்ணன் அமைச்சர் என்றாலும், கொள்கையிலே தோழர் சம்பந்தம் காட்டிய உறுதிப்பாட்டைப் பாருங்கள் என்று அனைவரும் பாராட்டினர்.

இந்த அரசியல் சம்பவம் நினைவிற்கு வந்தது—எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

## வி. வி. இராமசாமி

—எம். எல். சி.

தோழர் வி. வி. ராமசாமி, எம். எல். சி, அவர்கள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல், சென்னை 'அறிவக'த்தில், தோழர் அண்ணாத்துரையை சந்தித்து சென்னை அரசியல் நிலைமை பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

சென்னை சட்ட சபையில் அமைந்துள்ள திராவிட சட்ட சபைக் கட்சி குறித்தும், ராஜ்யங்களைத் திருத்தி அமைக்கும் பிரச்னைபற்றி கவனிக்கும் கமிஷன் சம்பந்தமாகவும் கலந்து ஆலோசித்தனர். [illegible]

இந்தத் திங்கள் 20-ந் தேதி வரையில் தோழர் ராமசாமி சென்னையில் இருக்கிறார்.

## விறகுக்கட்டிலே இலட்ச ரூபாய் தங்கம்

அதிகாரிகளிடம் சிக்கிற்று

விறகு கட்டைகளை ஏற்றிக் கொண்டுவந்த ஒரு படகிலிருந்து, 1,200 தோலா தங்கம், சுங்க இலாகா அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. விறகு கட்டுகளுக்கடியில் இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தை மறைத்து வைத்திருப்பதாகத் தகவல் கிடைத்ததன் பேரில் சோதனை செய்யப்பட்டது.

இது சம்பந்தமாக படகுக்காரரும் லட்சுமி பிரசாத் என்ற வணிகரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் ரத்னகிரியில் நடைபெற்றது.

# ★ நாம் விரும்பும் துறவிகள்! ★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உருக்கவல்ல எரி நெருப்பில் நின்று தவம் செய்தவர், ஈசானிய மூலையில் ஏழாண்டு, இமயத்தில் எட்டாண்டு, முட்பாய் மீது மூன்றாண்டு, என்றெல்லாம் கூறப்படும் வகை வகையான தவமிருந்ததாகக் கூறப்படும் தபோதனர்கள், ரிஷிகள், முனிவர்கள் என்போர் எவரும் கடுந் தவத்துக்குப் பிறகு, கடவுள் பிரத்யட்சமாகி, "மெச்சினேன், உன் தபோபலம் கண்டு!" என்று கூறி, "என்ன வரம் வேண்டும், கேள், தரப்படும்!" என்று கேட்ட காலை, "ஐயனே! பஞ்சமும் பிணியும் நீங்கி, பகைச் செயல் அடியோடு ஒழிந்து, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வரம் தாரும்! நாட்டிலே நடுமூளும் சண்டைகள் இனி எழாதபடி வரம் அருளுங்கள்! ஏழையின் கண்ணீர் துடைத்திடவல்ல நிலையைத் தாருங்கள்!" என்று கேட்டுப் பெற்றதாகக் கதையும் காணோம்; மாறாக, "எனக்கு இந்திரப் பதவி தாரும், இறவா வரம் தாரும், தொட்டால் பட்ட மரம் துளிர்விட வேண்டும், அத்தகைய சக்தியைத் தாரும், சதா சர்வ காலமும் நாரதரின் தம்பூரின் ஒலியும் நந்தியின் மிருதங்க ஒலியும் என் செவிக்கு விருந்தாக அளியும், அப்பனும் அம்மையும் நடனமாடிடும் அருங்கலைக் காட்சியைக் காணும் வரம் தாரும்," என்று இவ்விதம் ஏதேனும் கேட்டுப் பெற்றனர், என்றே புண்ய காதைகள் யாவும் கூறுகின்றன. அவரவர் தத்தமக்கு ஏற்ற வரம் பெற 'துறவு' ஒரு வழி என்று கொண்டாரேயன்றி, உலகம் உய்ய, தமது 'துறவு' ஒரு வழியாக அமைதல் வேண்டும் என்று கொண்டாரில்லை. அங்ஙனம் 'ஆதி காட்களிலே' இருந்துவந்த அருந் தவவாணர்களோ, நோக்கமோ முறையோ, கொண்டாரில்லை என்றால், இக்காலத்திலேயா, அந்த எண்ணம் எழப்போகிறது!! முயற் கொம்பு! அத்திப்பூ!! நமக்கு, நாட்டுக்கு. இதுகாலை அவசரமாகத் தேவை, துறவிகளல்ல; தமது நலனைப் பெரிதெனக் கொள்ளாமல், பிறர் நலனைப் பேணும் பெரும் பணிக்குத் தம்மை ஒப்படைக்கும் உள்ளம் படைத்த உத்தமர்கள் தேவை, ஏராளமாக!

எம்முறையில் 'தொழுகை' நடாத்தினால், இறைவன் அருள் எனக்குக் கிட்டும் என்ற எண்ணம் கொண்டு, துறவு மேற்கொள்பவர்களைவிட, எம்முறையில் பணியாற்றினால் எல்லோரும் இன்புற்று இருக்கும் நிலை நாட்டிலே மலரும், பண்புகள் செழித்திட வழி யாது, என்று கண்டறிந்து, நற்பணி புரிவோர் ஏராளமாகத் தேவை. தனிப்பட்டவரின், விடுதலை, வீமோக்ஷம், நற்கதி, மறுமைப்பேறு, என்று எம் பெயரிட்டு அழைப்பதாயினும், அவை காடுவேதைக்காட்டிலும், நமது பணியின் பயனாக, வளர்ந்த வாழ்வு நிமிர்ந்தது சிலருக்கேனும், கலங்கிய முகத்திலே களிப்பின் சாயலேனும் பிறந்தது சிலருக்கேனும்—என்று கூறத்தக்க முறையிலே, பொதுப் பணியாற்றிடும் பொறுப்பாளர்கள் அவசர அவசரமாகத் தேவை!! தன்னலம் தகர்க்கப்பட வேண்டும், அது 'தவசி'யானால்தான் இயலும், என்றால், புராண மார்க்க போதனையை ஒப்புக்கொண்டு பேசுவதானாலும், தேவலோகத்திலே இன்னும் சிலர் சென்றுவாழ வழி கிடைக்குமேயன்றி, பூலோகத்திலே இன்பம் வளர்ச்சி அடைய வழி பிறவாது! இங்குள்ள மக்களை வாழவைக்கும் பணி, தத்தமது 'நற்கதி'யைப் பெற மேற்கொள்ளும் துறவுப் பணியைவிட, தூய்மையும் மாண்பும், பயனும் மிகுந்ததாகும். இதனை மெள்ள மெள்ள மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

சேத் மோதிலால், துறவு இலக்கணப்படி, வழுவாது நடந்து, ஜெயினமார்க்க சீலர்களின் நெறியிலே சென்று, காணப் போவது என்ன? அவருக்கு ஓர் உயர்நிலை—அவர் போற்றும் மார்க்கம் உரைத்திடும் நிலை, கிடைக்கக்கூடும், ஆனல் அதே இலட்சாதிகாரி, தமது 'செல்வத்தை', ஏழைகள் உய்ய வாரி வழங்கி இருந்தால், எத்தனை எத்தனை இதயங்களிலே இன்பம் வழிந்தோடும், எத்தனை குடிசைகளிலே உள்ள இருள் அகன்றிருக்கும்! இன்னமும் கூர்மையாக ஆராய்ந்தால், பல இலட்சம் தம்மிடம் சேரும் விதமாக, தொழிலோ, விவசாயமோ, வியாபாரமோ, அவர் செய்யாதிருந்திருந்தால், எத்தனையோ மக்களிடம் அந்தச் செல்வம் பரவி இருந்திருக்கும்! நாம், கோலத்தால் துறவிகள் ஆனோரைக் காட்டிலும், தமது வாழ்க்கை முறையால், தூய்மையானர்களாக இருக்கும் இல்லறவாசிகளையே வரவேற்போம். அவர்கள் மக்களை வாழவைக்கும் 'வரம்' தரவல்லவர்கள்! தங்கள் 'வலிவு' தங்களுக்கே புரியாததால் அவர்கள் ஆண்டிக் கோலத்தாரை மேலோர் என்று எண்ணி ஏமாறுகிறார்கள், வேறொன்றுமில்லை!

குடும்பம் சிதையினும், வாழ்வு நைந்துபோயினும் நற்பணியாற்றும் அறநெறியினின்றும் வழுவலாகாது என்ற உறுதிப்பாடும், அப்பணிபுரிவதால் இம்மி அளவு நன்மையேனும் பிறருக்கு ஏற்பட்டால், 'தவம் பலித்தது' என்று எண்ணும் மனப்போக்கும் கொண்ட, காவி அணியா, காடு ஏகா, கமண்டலம் தூக்கா, காதைகளில் கதி தேடா, 'துறவிகள்' தேவை!

# இந்தி ஆட்சி மொழியாகும் காலத்தை நீட்ட காங்கிரஸ் தமிழர் கோரிக்கை

## அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது
## இந்தி வெறியர் ஆர்பாட்டம்

புதுடில்லி, மே 8—

“நீண்டகாலமாக இந்தி மொழியின் தொடர்பின்றி வாழ்ந்துவந்த மக்கள் அனைவரும் அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் இந்தி மொழியினை கற்றுக்கொள்வார்கள் என்பது உண்மைக்குப் புறம்பானதாகும்,”

இவ்வாறு இந்தியை அரசாங்க மொழியாக்குவது பற்றி நடைபெற்ற மக்கள் சபை காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்தில் தென்னிந்திய உறுப்பினர் ஒருவர் குறிப்பிடும்போது இந்தி மொழி ஆதரவாளர்கள் இடையே குறுக்கிட்டு கேலியும் கிண்டலும் கலந்த குரலில் ஆரவாரம் செய்தனராம்.

அதுகண்ட தென்னிந்திய உறுப்பினர், “நீங்கள் அந்த நம்பிக்கையுடன் இருப்பீர்களேயானால், கண்டிப்பாய் ஏமாற்றமடைவீர்கள் என்று வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன்,” என்று குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய நேரு, பிரதேச மொழிகளுக்கு எந்த இன்னலும் தராது இந்தியை அரசாங்க மொழியாக்குவது பற்றிய பிரச்சினையையும் அதன் மூலம் இந்திய ஒற்றுமையைப் பாதுகாப்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்றார்.

அவர் மேலும் சொன்னார்:—

“இந்திதான், அரசாங்க மொழி என்று அரசியல் சட்டம் ஒத்துக் கொண்டிருக்கிறது; அதனாலேயே, இந்தி தேசிய மொழி ஆகிவிட முடியாது. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மொழியும் இந்த தேசத்தின் தேசிய மொழிதான். இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பேசப்படும் மொழிகளிலிருந்து பிரித்து இந்திதான் தேசிய மொழி என்று இந்திப் பிரியர்கள் பேசுவது தவறு” என்று குறிப்பிட்டார்.

எந்தவித முடிவுக்கும் வராத இன்றைய கூட்டத்தில், இந்தி மொழியை 15 ஆண்டுகளுக்குள் அரசாங்க மொழி ஆக்கவேண்டியதற்கான எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாகச் செய்ய வேண்டுமென, இந்திப் பிரியர்கள் பேசினர்.

அங்கத்தினர்களில் ஒருவர் இந்தியை முழுவதும் வடமொழி மயமாக்கிவிட வேண்டுமென்றார்.

இந்தி மொழி பேசாத தென்னிந்தியர்களுடைய உணர்வையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்தின் இந்தி மொழி பெயர்ப்பு, புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டு, இனி அதில் உள்ள வார்த்தைகளை மாற்றுவது போன்ற எதையும் செய்யலாகாது என்ற ஒருமெம்பரின் யோசனையை நேரு நிராகரித்தார்.

வளர்கின்ற ஒரு மொழி புதிய வார்த்தைகளை வேறு மொழிகளிலிருந்து எடுத்துக்கொள்வது தவறல்ல என்று நேரு கூறினார்.

“இந்தியைப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கட்டாய பாடமாக்கினால், வருகிற 4 அல்லது 5 ஆண்டுகளில், இந்தி மொழியில் வேலை செய்யும் திறனுள்ளவர்களை உண்டாக்க முடியும், இதே முறை தொடர்ந்து 20 அல்லது 25 ஆண்டுகளுக்கிருந்தால்! இந்தி பேசத் தெரியாதவர்களில் கணிசமான பேர், இந்தி மொழி கற்றுக்கொண்டவர்களாவர். அந்த நிலையில் இந்திய அரசாங்கம் இந்தியை அரசாங்க மொழியாக அமுலாக்க முடியும்” என ஒரு அங்கத்தினர் கூறினார்.

வருகிற எட்டு பத்து ஆண்டுகளில், அரசாங்கத்தில் உள்ள மிகத் தேவையான இலாக்காக்களில் உள்ளவர்களை இந்தி கற்றுக் கொள்ளுமாறு சொல்லலாம்; ஆனால் அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்புடைய இலாக்காக்களும், வக்கில், ஆடிட்டர் போன்ற தொழில் செய்பவர்களும் இந்தியை இந்தக் கால வரம்புக்குள் கற்றுக் கொள்வது இயலாது. என இன்னுமொரு அங்கத்தினர் கூறினர்.

“ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி தனக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவி கிடைக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது, இந்தி தெரியாத குறையைக் காட்டி, தனக்கு அந்தப் பதவி கிடைக்காமற் போகலாம் என்பதற்காகவோ இந்தி கற்றுக்கொள்ள முடியுமா? ஆங்கிலம் ஒரு அன்னிய மொழி என்று வெறுப்பது தேவையில்லாதது. ‘வெளிநாடு’ என்று சொல்லும் வார்த்தையே சிலருக்குப் பிடிக்கவில்லை போலும்” இன்னும் சிறிது நாளில், வெளிநாட்டு வியாபாரம், வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றைக் கூட வெளிநாடு என்ற வார்த்தைக்காக வெறுப்பார்கள் போல் தெரிகிறது. என்று அதே உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

# கனம் ராமசாமி காணும் கண்டனக் கணைகள்

## கொள்கை மறந்தவருக்குப் பாடம் புகட்ட வாரீர்!

## தோழர் ஆர். பாலகுருசாமி பாணி

### செயற் குழு கூடி திட்டம் வகுக்கும்

தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஆர். பாலகுருசாமி அறிவிப்பதாவது:

“கடந்த பொதுத் தேர்தலில் மக்களின் நலனையே கவனிக்காத சக்தியான காங்கிரஸை எதிர்த்து மற்ற முற்போக்கு கட்சிகளின் உதவி கொண்டு பெரு வெற்றியடைந்த தமிழ் நாடு உழைப்பாளி கட்சித் தலைவர் எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்கள், சொன்ன வாக்குறுதிகளை மறந்து, கொள்கைகளை மறந்து மந்திரி பதவிக்காக காங்கிரசோடு சேர்ந்துவிட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன்; மேலும் தி. மு. கழகம், திராவிட நாடு ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு, நமது ஆதரவைப் பெற்று, வெற்றிபெற்ற அவர், இன்று அப்படி ஒருவித ஒப்பந்தமும் இல்லையென்று கூசாமல் கூறுவது நமது மனதையெல்லாம் புண்படுத்துகிறது; ஆகவே, அவருடைய போக்கை தகுந்த முறையில் கண்டனம் செய்யவும், கண்டிக்கவும் விரைவில் மாவட்டக் குழுவை கூட்ட இருக்கிறேன் என்பதைப் பொது மக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் மாவட்டச் செயலாளர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.”

★

## ‘நீர் எந்தக் கட்சி’

### எஸ். எஸ். ராமசாமிக்கு நோட்டீஸ்!

திண்டிவனம், மே 8—

“எஸ். எஸ். ராமசாமி படையாச்சி எந்தக் கட்சியிலிருக்கிறார்? உழைப்பாளிக் கட்சியிலா, அல்லது காங்கிரசிலா? இதை அவர் தெளிவு படுத்திவிட வேண்டும்,” என்று செஞ்சி தாலுகா வன்னிய குல சங்கம் முடிவு செய்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறது.

4—5—54 மாலை செஞ்சி தாலுகா வன்னிய குல சங்கம் பாலப்பட்டு குப்பு கவுண்டர் தலைமையில் கூடியது. கூட்டத்தில் 50 பேர் கலந்துகொண்டனர்.

“இராமசாமி படையாச்சி, தென் ஆற்காடு மாவட்ட வன்னிய குல சங்கத்தை கூட்டி முடிவு செய்யாமல் எப்படி மந்திரி ஆகலாம்?” என்று பலத்த விவாதத்தின் முடிவில் மேல்கண்டவாறு நோட்டீஸ் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

அவரது பதில் வந்த பிறகு அடுத்த கூட்டத்தை கூட்டி முடிவு செய்யப்படும்.

★

## தேர்ந்தெடுத்த தொகுதியிலேயே பலத்த எதிர்ப்பு

விருத்தாசலம், மே 8—

விருத்தாசலம் வட்டம் கோனூரில் 6—5—54 மாலை 6 மணியளவில் தி. மு. கழக துவக்க விழா தோழர் என். வி. கேசவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், “இந்தத் தொகுதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ். எஸ். இராமசாமி, மந்திரி பதவி ஏற்றதன் மூலம், மக்களுக்குத் தந்த வாக்குறுதியை மீறி துரோகம் செய்துவிட்டார்,” எனக் குறிப்பிட்டார்.

ஆயிரம் பேருக்குமேல் கூடியிருந்த அந்தக்கூட்டத்தில் ராமசாமி படையாச்சி மந்திரி பதவி ஏற்றதை பற்றி கண்டித்து ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சுயமரியாதை திருமணங்களை நிதி அமைச்சரே நடத்தியுள்ளார்

## கடவுள் மேல் புது மந்திரிக்கு ஏற்பட்ட திடீர் பக்தி!

### சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமியின் குறிப்பு

சென்னை, மே. 8—

சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்கும் மசோதா மீது சென்னை சட்டசபையில் விவாதம் நடைபெற்றபோது தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. பேசுகையில், புராணங்கள், இந்துமத சம்பிரதாயங்கள் எல்லாம் கேடு பயப்பன என்று குறிப்பிட்டபோது, மந்திரி ராமசாமி படையாச்சி ஒழுங்குப்பிரச்னையை எழுப்பினார்.

‘தனக்கு மதம், கடவுள் இவற்றில் நம்பிக்கை இல்லை என்பதற்காக பிற அங்கத்தினர்களைப் பாதிக்கும் வகையில் பேசலாமா?’ எனக் கேட்டார் ராமசாமி படையாச்சி.

ஒழுங்குப் பிரச்னையை சபைத் தலைவர் அனுமதிக்கவில்லை.

தோழர் கோவிந்தசாமி, ‘மந்திரிக்குத் திடீரென கடவுள் பக்தி வந்திருப்பது அனைவருக்கும் தெரியும்; (எதிர்க் கட்சியினர் ஒரே சிரிப்பு) அவர் புதிய பக்தியுடன் பல கோவில்களுக்குச் சென்று வருவது தெரியும்; புதிதாக மந்திரியானவர்கள் கோவிலுக்குப் போய் வருகிறார்கள்; அதற்கு ராமசாமி படையாச்சி விதிவிலக்கல்ல,” என்று பதிலளித்தார்.

மந்திரி: ‘அப்படி அல்ல.’

தோழர் கோவிந்தசாமி தொடர்ந்து பேசுகையில், மதச் சார்பற்ற அரசாங்கம், மதச் சடங்குப்படி நடக்கும் திருமணங்களை ஆதரிப்பது ஏன் எனக் கேட்டார். அவர் மேலும் சொன்னார்—சுயமரியாதைத் திருமணங்களை யார் வேண்டுமானாலும் நடத்தி வைக்கலாம். மந்திரி சுப்பிரமணியமே பல திருமணங்களை நடத்திவைத்திருக்கிறார் என்றார்.

அவர், ‘சுப்பிரமணியத்தை எடுத்துக் கொள்ளுங்கள்,’ என்றபோது தோழர் பழனியாண்டி குறுக்கிட்டு, ‘மந்திரி சுப்பிரமணியத்தையா?’ என்று கேட்டார்.

கோவிந்தசாமி:— “மந்திரி சுப்பிரமணியத்தைச் சொல்லவில்லை; வள்ளியை மணந்த சுப்பிரமணியத்தைத்தான் சொல்கிறேன். யானையைக் காட்டிப் பயமுறுத்தி வேடுவப் பெண்ணான வள்ளியை அவர் மணந்து கொள்ளவில்லையா? மேனகைக்கும், விசுவாமித்திரருக்கும் பிறந்த சகுந்தலை துஷ்யந்தனை மணக்கவில்லையா?” எனக் கேட்டார்.

# முன்னால் பார்த்தால் முருகன் குதிரை! பின்னால் பார்த்தால் பெருமாள் குதிரை!

## கம்பன் யதார்த்தவாதியாம்! வெறும் கற்பனை வாதியாம்!

★

### “யதார்த்தவாதி கம்பன்!”

“கம்பன் ஒரு சிறந்த யதார்த்தவாதி (Realist); ‘எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு’, ‘எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வதுறைவதறிவு’ என்ற குறளுண்மைகளைக் கடைப்பிடித்தவன் கம்பன்; எனவே, அவன் வாழ்ந்த காலத் தமிழகத்தின் யதார்த்த நிலைக்கொப்ப அன்றையத் தமிழ் மக்களின் உணர்ச்சித் தரத்திற்கேற்ப, தமிழர் பண்பாட்டிற்கு இசைய, இராமகாதையின் உருவம், உள்ளடக்கம் (Form & Content) இரண்டையும் சமைத்தான்.”

—‘ஜனசக்தி’: 18-4-’54

### பொதுவுடைமையினரின் புலம்பல்!

உங்கள் குறிப்புக்கு!

புதுடில்லி, மே 8—

டாடா லோகோமோடிவ் அண்ட் எஞ்சினியரிங் கம்பெனியில் மொத்தம் 7 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இதில் அரசாங்கத்தின் பங்கு இரண்டு கோடி ரூபாய்; இதுவரை லாபத் தொகை எதுவும் அறிவிக்கப்படவில்லை.

• • •

மத்திய கிழக்கு நாடுகளில் பிரசாரத்திற்காக, 1953—54-ம் ஆண்டில் இந்திய சர்க்கார் சுமார் ரூ 9,49,800 செலவழித்திருக்கிறது.

* * *

சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் 1952-53-ம் ஆண்டில் 40.19 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

### “கற்பனைதான்!”

“கோசல நாட்டைப் பற்றிய கம்பனுடைய கற்பனையில் கருத்துக்கள் மட்டுந் தெறித்தன! யதார்த்தமாகவே கம்பன் அன்று வாழ்ந்த தமிழகம் இவ்வாறு இருந்ததா? அல்லது அவனுடைய லட்சிய நாடான கோசலம் இவ்வாறு இருந்ததா? இல்லை. இந்தக் கருத்துக்கள் கம்பனுடைய சிறந்த கற்பனைக் கருத்துக்கள்.

கம்பன் கண்ட நாடும் நகரமும் கற்பனை; யதார்த்தமல்ல! ஆகவே, இந்த முரண்பாடுகளைப் பார்க்கிறோம்......

......மனித வாழ்விலும், மனிதனிடத்திலும் முரண்பாடு எழத்தான் செய்யும். அதோ நிற்கிற தூண்தான் முரண்பாடில்லாது நின்றபடி நிற்கும்”

—‘ஜனசக்தி’ மே தின மலர்.

---

மூன்று முதல் நான்கு சதவிகிதம் வட்டியுள்ள கடன்களாக ரூ. 863 லட்சமும், மானியமாக ரூ 633 லட்சமும் காஷ்மீர் சர்க்காருக்குத் தரப்பட்டிருப்பதாக சமஸ்தான இலாகா மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, [illegible] நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.